மேலும், சட்டப் பேரவையின் 174-வது விதிக் கிணங்க திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## (இ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1969–70-ம் ஆண்டுக்குரிய அவையுரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப் பேரவையின் பன்னிரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டுக் கீழ்க்கண்ட பன்னிரண்டு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள் :—

1. திரு. கரு. சீமைச்சாமி.
2. ,, சி. கோவிந்தராசன் (நெல்லிக்குப்பம்).
3. ,, பி. எஸ். சந்தானம்.
4. ,, டி. சி. திம்மராயன்.
5. ,, கே. ஆண்டி என்னும் குருசாமி.
6. ,, மு. சண்முகம்.
7. ,, மு. கோபால்.
8. ,, எஸ். கே. வடிவேலு.
9. ,, ஆ. கருப்பையா.
10. ,, ஏ. ஆறுமுகம்.
11. ,, கே. விநயகம்.
12. ,, ஜே. ஜேம்ஸ்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1969–70–ஆம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

1969-ம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ம் நாளிலிருந்து மேற்படி குழுவின் அமைப்புப்பற்றி பேரவை விதியில் 12 உறுப்பினர்களுக்குப் பதிலாக 14 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, எஞ்சியுள்ள இரண்டு இடங்களுக்கு ஆன தேர்தல் அடுத்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் நடத்தப்படும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேரவைத் துணை தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

சட்டப்பேரவையின் 183 (4)-வது விதிக்கிணங்க மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

## (ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப்பேரவையின் 201 (1)–வது விதியின் கீழ் 1969–70-க்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களைச் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. பழனிவேல் ராஜன்.
2. ,, பெ. சீனிவாசன்.
3. ,, கா. வேழவேந்தன்.
4. ,, ஆலடி அருணா.